**எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக் காலத்தில்தான் 128 சதவிகிதம் கடன் அதிகரிப்பு! அதற்கே ரூ.1.40 இலட்சம் கோடி வட்டி கட்டி வருகிறோம்!**

# ஒன்றிய அரசிடமிருந்து வர வேண்டிய நிதிப் பகிர்வு வந்தால் நமது கடனில் ரூ. 3 லட்சம் கோடி குறையும்!

## சட்டப்பேரவையில் – துணை நிதிநிலை அறிக்கை விவாதத்தில் குறுக்கிட்டு – அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமான பதில்!

**சென்னை, அக். 18 - சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் (16.10.2025) துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும்போது தி.மு.க.ஆட்சியில் கடன் அதிகரித்து விட்டதாக பேசினார். அப்போது நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு குறுக்கிட்டு எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த போதுதான் 128 சதவிகிதம் கடன் அதிகரித்ததாகவும், தற்போது 93 சதவிகிதம்தான் என்றும் குறிப்பிட்டார்.**

இது குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ கடனில் தமிழ்நாடு தத்தளித்து கொண்டிருப்பதாக சொன்னார்கள்.

இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டுகளாக நாங்கள் வாங்கியிருக்கக்கூடிய கடனில் 1.40 இலட்சம் கோடி ரூபாய் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தினுடைய முடிவில், 2020 - 2021 ஆம் ஆண்டு நீங்கள் உங்கள் ஆட்சியை முடித்துவிட்டு போனபிறகு, அப்போது நீங்கள் வைத்துவிட்டு போன கடனிற்கு, அதாவது இந்த 1.40 இலட்சம் கோடி ரூபாய் கடனிற்கு வட்டி மட்டும் கட்டிக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி இந்த ஆட்சி. நீங்கள் வைத்துவிட்டு போன கடனிற்கு 1.40 இலட்சம் கோடி ரூபாய்க்கு வட்டிக் கட்டிக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி. யார் கடனைப் பற்றி பேசுகிறீர்கள்? நான் கடனைப் பற்றி சொல்கிறேன். நீங்கள் வைத்துவிட்டு போன கடனைப் பற்றிய விவரங்கள் என்னிடம் இருக்கிறது. நான் அதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பலமுறை (குறுக்கீடு) ABSOLUTE NUMBERS-ல் பேச வேண்டுமென்றால், நான் பேச தயராக இருக்கிறேன். நீங்கள் எவ்வளவு ரூபாய் வைத்துவிட்டு போய் இருக்கிறீர்கள் என்பதை நான் திருப்பிச் சொல்கிறேன். எந்தளவில் விகிதாச்சரம் உங்கள் ஆட்சியில் வைத்திருந்தீர்கள் என்பதை நான் சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளில், மொத்த கடன் இருப்பானது 128 சதவிகிதம். உங்களுடைய ஆட்சியிலே அது வளர்ந்திருக்கிறது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரையிலா ஆட்சிக் காலத்தினுடைய தொடக்கத்தில் 1 இலட்சத்து 1 ஆயிரத்து 349 கோடி. அந்த ஆட்சியினுடைய முடிவில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 66 கோடி ரூபாய். எவ்வளவு போனது, 108 சதவிகிம் உயர்ந்திருக்கிறது. 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2020 -2021 ஆம் ஆண்டு வரையிலான இந்த ஆட்சியினுடைய தொடக்கத்தில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 60 கோடி ரூபாய், முதலில் அம்மையார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முடித்துவிட்டு போனார்களல்லவா!

**எடப்பாடி காலத்தில் 128 சதவிகித கடன் உயர்வு!**

அடுத்து, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 66 கோடி ரூபாயாக இருந்த இந்தக் கடன், ஆட்சியை நீங்கள் முடிக்கும்போது 4 இலட்சத்து 80 ஆயிரத்து 300 கோடி ரூபாய். எத்தனை சதவிகிதம் கூடியிருக்கிறது என்று தெரியுமா, 128 சதவிகிதம். இந்த 128 சதவிகிதம் மொத்தக் கடனிருப்பு உங்களுடைய ஆட்சியில் வளர்ந்திருக்கிறது. 2020-2021 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வருகிறோம். 2021 ஆம் ஆண்டிலிருந்து நீங்கள் விட்டு விட்டு போன 4 இலட்சத்து 80 ஆயிரத்து 300 கோடி ரூபாய் அதாவது சுமார் 5 இலட்சம் கோடி ரூபாய் கடன் நீங்கள் வைத்துவிட்டு போனீர்கள். இன்றைக்கு 9 இலட்சத்து 29 ஆயிரம் கோடி ரூபாய் வந்ததால், இதனுடைய கடன் வளர்ச்சியை நீங்கள் பார்த்தீர்களென்று நாளது தேதிவரையில் 93 சதவிகிதம்தான். இப்போது நீங்கள் பாருங்கள், 108 சதவிகிதத்திற்கு கடனை யார் வளர்த்தது? 128 சதவிகிதத்திற்கு கடனை யார் ஒட்டுமொத்தமாக கொண்டுபோனது? 128 சதவிகிதம் அதிகமா? 93 சதவிகிதம் அதிகமா? கடனுடைய வளர்ச்சியில் அதிகமாக ஒட்டுமொத்த கடன் இருப்பில் 128 சதவிகித வளர்ச்சியைக் கண்டது உங்கள் ஆட்சி. எனவே, கடன் பற்றி சொல்வதற்கு தார்மீக கடமைகள் இல்லை.

மற்றொரு முறைகூட நான் சொல்கிறேன். மீண்டும் நான் வருகிறேன், ABSOLUTE NUMBERS-ல் நாம் பேசுவதை விட இன்னொன்றையும் சொல்கிறேன். அது அரசியல்; இருக்கட்டும். பொதுவாக, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், நம்முடைய நிதி நிர்வாகம் இதற்கு காரணமாக இல்லை. தொடர்ச்சியான காரணம், நீங்கள் இப்போது சேர்ந்திருக்கிறீர்கள் பாருங்கள்; 'சேராத இடந்தனிலே சேர வேண்டாம்' என்று சொன்னார்கள்.



அதை மறந்துவிட்டு நீங்கள் போய் சேர்ந்திருக்கிறீர்களே, (குறுக்கீடு) இல்லை. நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் சேர்ந்த காட்சியினால்தான் (குறுக்கீடு) அந்த ஆட்சி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தொடர்ச்சியாக செய்யக்கூடிய காரணத்தினால்தான் நான் இந்த அவையிலே சொல்வேன். ஐந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளிலிருந்து இப்போது 14வது நிதிக்குழுவின் பரிந்துரை வரை மத்திய வரிகளிலிருந்து தமிழ்நாட்டினுடைய பங்களிப்பு குறைந்து கொண்டு வருகிறது. அதனால்தான் நமது நிகர பொதுக் கடன்களைப் பார்த்தீர்களென்று சொன்னால் அந்த வரிப்பங்கீடு என்பது 32 சதவிகிதத்திற்கும்கீழே குறைந்திருக்கிறது. ஒருகால் நீங்கள் இதையெல்லாம் பேசி FINANCE COMMISSION லிருந்தோ நமக்கு வரக்கூடிய DEVOLUTION லிருந்தோ அல்லது மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு வர வேண்டிய வரிப்பங்கீடுகளிலிருந்தோ நீங்கள் இந்த வரிகளையெல்லாம் பெற்றுத்தருவீர்கள் என்று சொன்னால், நம்முடைய கடன் ரூ.3 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு குறையும். அதைச்செய்வதற்கு நம்முடைய உறுப்பினர்களும், அவரைச் சார்ந்திருக்கக்கூடிய இயக்கமும் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**அமைச்சர் பி. மூர்த்தி:** 2021ஆம் ஆண்டு கொரோனா காலத்தில் GST வருவாய் வரவில்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ரூ.84 ஆயிரம் கோடி GSTம், 12 ஆயிரம் கோடி ரூபாய் COMPENS ATION சேர்த்து 96 ஆயிரம் கோடி ரூபாய் 2021 ஆம் ஆண்டில் வருவாய் வரப்பெற்றுள்ளது.

அன்றைக்கு பதிவுத் துறையில் 10 ஆயிரம் கோடி ரூபாய் வரப்பெற்றுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 96 ஆயிரம் கோடி; அதில் பதிவுத் துறையில் 10 ஆயிரம் கோடி வரப்பெற்றுள்ளது.

அந்தகாலத்தில் (குறுக்கீடு) 2021ல் கொரோனா காலத்தில் வருவாயே வரவில்லை; GSTம் வரவில்லை, பதிவுத் துறையில் வரவில்லை என்று சொன்னதற்கு, (குறுக்கீடு) வந்திருக்கிறது என்று சொல்கிறேன். 96 ஆயிரம் கோடி மற்றும் 10 ஆயிரம் கோடி வந்திருக்கிறது என்று சொல்கிறேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற போது, அதற்கு முன்னால் இருக்கக்கூடிய தி.மு.க. ஆட்சி விட்டுச்சென்றிருக்கக்கூடிய 1 இலட்சம் கோடி ரூபாய் இருந்தது என்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் விட்டுச் சென்றிருக்கக்கூடிய 5 இலட்சம் கோடி ரூபாயை ஏன் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? நாங்கள் சொல்லும் போது நீங்கள் எத்தனை கோடி? 5 இலட்சம் கோடியை விட்டுச் சென்றிருக்கிறீர்கள் So, அது உங்களுக்கு CARRY FORWARD. தி.மு.க. ஆட்சியில் 1 இலட்சம் கோடி என்று அவர் சொன்னார். நீங்கள்விட்டுச் சென்ற 5 இலட்சம் கோடியை சொல்ல வேண்டுமல்லவா!

**தி.மு.க. ஆட்சியிலும் கொரோனா வந்தது!**

இன்னொன்று கொரோனா காலத்தைச் சொல்கிறார். ஏன் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறபோது கொரோனா வரவில்லையா? 2021 ஆம் ஆண்டு நாங்கள் வருகிறபோது என்ன நிலைமை இருந்தது. உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற ஒரு கொரோனா நிலைமை. முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்? (குறுக்கீடு) அன்றைக்கும் இதேதான்; (குறுக்கீடு) இல்லை, இல்லை (குறுக்கிடு) LOCKDOWN இல்லை என்று சொல்லவில்லை (குறுக்கீடு) LOCKDOWN இருந்தது, ஆனால், முதலமைச்சர் அவர்கள் ஒரு முடிவு எடுத்தார். என்ன முடிவு என்றால் WESTERN COUNTRIES WORK செய்துகொண்டிருக்கிறார்கள். முதல் தடவை LOCKDOWNல் எல்லா இடங்களும் மூடப்பட்டது. இப்போது மேற்கத்திய நாடுகள் இயங்குகிறார்கள் என்று சொன்னவுடன், தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து தொழிற்சாலைகள் அனைத்தும் இயங்குவதற்கான வழிமுறைகளை செய்ததோடு, ஏற்றுமதியை நிறுத்தாமல், நீங்கள் எல்லாம் WESTல் இருந்து வந்திருக்கிறார்கள். பேசுகிறீர்கள் அங்கிருக்கக்கூடிய எந்த ஏற்றுமதியும் நிறுத்தப்படாமல் அத்தனை பேருக்கும் இந்த ஏற்பாட்டை செய்ததோடு, VACCINATION கொடுக்கிற போதுகூட தடுப்பூசி யாருக்கு முதலில் கொடுத்தார்.

**வருவாய் பற்றாக்குறையை குறைத்திருக்கிறோம்!**

தொழிற்சாலைகளுக்கு முதலில் கொடுத்தார், தொழிலாளர்களுக்கு கொடுத்தார். எனவே, அதன் வாயிலாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். REVENUE DEFICITஐப்பற்றி எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் அதன் விவரத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 20212022 ஆம் ஆண்டிலே பொறுப்பேற்ற போது, மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.28 சதவிகிதம் வருவாய் பற்றாக்குறை நமக்கு இருந்தது. அதாவது 62 ஆயிரத்து 326 கோடி ரூபாய் நிதிச்சுமையை நாம் இன்றைக்கு எதிர்க்கொண்டிருக்கிறோம். ஒன்றிய அரசு தொடர்ச்சியாக இருக்கக்கூடிய இந்த மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அவர்கள் நிதி ஒதுக்காத அதே நிலையில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய நம்முடைய அரசு, இந்த அரசு வருவாய் பற்றாக்குறையை கட்டுக்குள்ளே வைத்திருக்கிறோம். கடந்த நிதியாண்டில் இருந்த மதிப்பீடுகளில் வருவாய்ப் பற்றாக்குறை 46 ஆயிரத்து 467 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருந்தாலும், நம்முடைய FISCAL MANAGEMENTனுடைய காரணமாக நிதி மேலாண்மை நடவடிக்கைகளின் காரணமாக நாங்கள் இந்த இலக்குகளை வருவாய் பற்றாக்குறை இலக்குகளை நாங்கள் பெருமளவு குறைத்திருக்கிறோம்.

நடப்பு நிதியாண்டினுடைய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 41 ஆயிரத்து 634 கோடி ரூபாய் என்ற இலக்கு நிர்ணயித்துள்ள நிலையில் இந்த ஆண்டு ஆகஸ்ட் 2025ல் எவ்வளவு வந்திருக்கிறது என்று கேட்டால், வெறும் 25 ஆயிரத்து 656 கோடி ரூபாய் என்கின்ற அளவில் தான் இது வைத்திருக்கிறது. நீங்கள் சொன்னது 41 ஆயிரத்து 634 கோடி ரூபாய், இன்றைக்கு ஆகஸ்ட் மாதத்தினுடைய நிலைமை வெறும் 25 ஆயிரத்து 656 கோடி ரூபாய் என்கின்ற அளவிலே இது இருக்கிறது. இது கடந்த வருடத்தில் ஆகஸ்ட் 2024 நீங்கள் எடுத்து பார்த்தீர்கள் என்றால் வருவாய் பற்றாக்குறையானது, அன்றைக்கு ரூ.30 ஆயிரத்து 168ல் இருந்தது. இன்றைக்கு இது சுமார் 4512 கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறையை நாம் குறைத்திருக்கிறோம். கடந்த ஐந்து ஆண்டுகளிலேநீங்கள் ஐந்து ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் சராசரியாக 1.8 சதவிகிதம் என்ற நிலையில் இருந்த மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் வருவாய் பற்றாக்குறையினுடைய அளவு 2021-2022ல் இந்த நடப்பு நிதியாண்டு வரை 1.8 என்கின்ற அளவிலே சதவிகிதம் குறைக்கப்பட்டு, அது 1.6 சதவிகிதம் என்ற அளவிலே இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

நிதி மேலாண்மை, FISCAL MANAGEMENT, FISCAL PRUDENCE அது இந்த அரசிற்கு வாய்க்கப்பட்டிருக்கக்கூடிய காரணத்தால் நாங்கள் சொல்கிறோமே யொழிய இது வாய் வார்த்தைக்காக சொல்வதில்லை. மீண்டும் ஒரு முறை—அதனால்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் பதில் சொல்லும்போது சொன்னேன். திரும்ப, திரும்ப கடன்களையோ, மற்றவற்றையோ நீங்கள் ABSOLUTE NUMBERSல் பார்க்காதீர்கள். PERCENTAGEல்தான் பார்க்கவேண்டும். அதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய ஒரு நிதி மேலாண்மை நடவடிக்கை. உங்கள் ஆட்சிக் காலத்திலும்கூட, நான் அதைத்தான் சொன்னேன். உங்கள் ஆட்சிக் காலத்தில் இருக்கக் கூடியதற்கு, இதற்கு ஒட்டுமொத்தமான காரணம், தமிழ்நாடு அரசினுடைய, நான் தமிழ்நாடு அரசினுடைய நிதி நிர்வாகத்தை சொல்லமாட்டேன். தொடர்ச்சியாக ஒன்றிய அரசு நம்மை வஞ்சித்துக்கொண்டு வரக்கூடிய காரணம்தான். அது ஏற்கெனவே உங்களுடைய, நிதியமைச்சராக இருந்தவர் இடத்தில்கூட, உங்களுக்கு வாய்ப்பு இருந்தால், இல்லை. இருந்தால்கூட, உங்களுக்கு வாய்ப்பு இருந்தால் நீங்கள் அவரிடத்தில்கூட அதை குறித்த கேட்டு தெரிந்துக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துகொள்கிறேன்.

அணுகுமுறை என்பது அடமானம் வைத்துவிடுவதாக ஆகிவிடக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோருக்கும் தன்மானம் இருக்கிறது. யாருமே அடகு வைக்கமாட்டோம். நீங்கள்தான் இப்போது தமிழ்நாட்டு மக்களை அடகு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுதான் எதார்த்தமான உண்மை. ஏனென்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்துள்ளார்.

---

அணைக்கட்டுத் தொகுதியில்

# காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவீர்!

## சட்டப்பேரவையில் அணைக்கட்டு – ஏ.பி.நந்தகுமார் வலியுறுத்தல்!

சென்னை, அக்.17- சட்டப்பேரவையில் அணைக்கட்டுத் தொகுதி உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் கேட்ட கேள்வியும், அக்கேள்விக்கு நகராட்சித் துறை அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**ஏ.பி.நந்தகுமார்:** வேலூர் மாவட்டம், வெயிலூர் மாவட்டம். குடிப்பதற்கு தண்ணீர் பிரச்சினை இருந்த காலத்தில் 2011ல் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் PHASEIஐத் தந்து வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரும்பகுதி மக்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் தந்தவர் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) PHASEII



இரண்டாவது கட்டமாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சற்றுமுன் அறிவித்தபொழுது ஜப்பான் நாட்டின் நிதியோடு PHASEII நிறைவேற்றித் தருவோம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய அணைக்கட்டு தொகுதியில் இருக்கக்கூடிய 59 கிராம ஊராட்சிகளிலும் அந்தத் திட்டத்தை சேர்த்து காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தை அந்த மக்களும் பருகக்கூடிய வகையிலே நீங்கள் செய்து தருவீர்களா?

**அமைச்சர் கே.என்.நேரு:** முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய முழுமையான அனைத்து கிராமங்களுக்கும் தருவதற்காக இந்த இரண்டாவது திட்டம் தொடங்கப்பட்டது. அது இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. இப்போது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கேட்டிருப்பது திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம், விழுப்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக கிட்டத்தட்ட 13,000 கோடி ரூபாய் அதற்காக திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளுக்கு திட்ட அறிக்கைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஒன்றிய அரசினுடைய அனுமதிக்காகத்தான், அதனுடைய பங்குத் தொகைக்காகத்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி வருகிறபோது திருவண்ணா மலைக்குச் செல்கிறபோது வழியில் இருக்கிற வேலூர் மாவட்டத்தில் இருக்கிற விடுபட்ட பகுதிகளுக்கு அந்தக் குடிநீர்த் திட்டம் தருவதுபோலதான் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எவ்வளவு விரைவாக ஒன்றிய அரசினுடைய பங்குத் தொகை கிடைக்குமோ அவ்வளவு விரைவாக, மாநில அரசைப் பொறுத்தவரை பங்குத் தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, அது கிடைத்தவுடன் உரிய முறையில் அந்தத் திட்டம் ஆரம்பிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

திருப்பத்தூர் – அரசு நிதி, உபயதாரர் நிதி மூலம்

# பசலிக்குட்டை முருகன் திருக்கோயிலில் திருப்பணி செய்யப்படுமா?

## பேரவையில் – திருப்பத்தூர் ஏ. நல்லதம்பி கேள்வி!

சென்னை, அக்.18- சட்டப்பேரவையில் திருப்பத்தூர் ஏ. நல்லதம்பி எழுப்பிய கேள்வி வருமாறு:-

**ஏ.நல்லதம்பி:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் ஆட்சியில் பல ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் திருப்பணிகள், குடமுழுக்குகள் செய்த அரசு நம்முடைய அரசு. எனது திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, பசலிக்குட்டை முருகன் திருக்கோயில் பழமையான திருக்கோயில். அந்த திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்ய அமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத்தொடரில் அறிவித்தார்கள். எனவே, அரசு நிதியும், உபயதாரர் நிதியும் பெற்று உடனடியாக அந்தக் கோயிலில் திருப்பணி செய்ய முன்வருவாரா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமைக்கும் பெருமை சேர்க்கின்ற ஆட்சி இந்த ஆட்சி என்றால் அதற்கு மாறுபட்ட கருத்து எந்த நிலையில் இருந்தும் எழுவதற்குண்டான சூழல் இல்லை. இந்த திருக்கோயிலை பொறுத்தளவில், 13 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில் உபயதாரர் நிதியாக நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் மற்றவர்களும் இணைந்து 7 கோடி ரூபாய் அளவிற்கு உபயதாரர் நிதியை வழங்கியிருக்கிறார்கள். மீதம் இருக்கின்ற நிதியும் துறையின் சார்பிலே



ஆணையர், பொதுநல நிதியிலிருந்து வழங்குவதற்கு பரிந்துரை வந்திருக்கிறது. ஆகவே, வெகு விரைவாக அதற்கும் ஒப்புதல் அளித்து, நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைவுபடுத்தி அவர் கோரியபடி எவ்வளவு விரைவாக திருப்பணிகளை மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தித் தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை

# விற்பனைக் கடைப் பணியாளர்களுக்கு 20 சதவீதம் போனஸ்!

சென்னை, அக்.18- தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2024-25 ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை (EX-GRATIA) 2025 -2026 ல் வழங்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் பணிபுரியும் (C மற்றும் D) பிரிவு ஊழியர்கள் மற்றும் மதுபான சில்லறை விற்பனை கடைகளில் பணிபுரியும் தகுதியுடைய கடைப்பணியாளர்கள் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணை தொகை தீபாவளி பண்டிகை கொண்டாடுவதற்கு வழங்கப்படும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.